# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
11/04/1989.

கௌரவ சிறிலங்கா ஜனாதிபதி அவர்கட்கு ஒரு பகிரங்கக் கடிதம்.

இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறும் வரை யுத்த நிறுத்தம் இல்லை.

நீங்களும், (உங்கள் அரசும்) இந்திய அரசும் 12/04/89 காலை-தொடக்கம் ஒருதலைப் பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளீர்கள். இந்தியப் படை எமது நாட்டில் இருக்கும் வரை யுத்த நிறுத்தம் என்பதில் அர்த்தமில்லை என்பது உங்களுக்கு தெரியாததல்ல.

இன்று உங்கள் அரசும், இந்திய அரசும் எம்முடைய பிரச்சனைகள் என்ன என்பதைப் பேசாமல் ஒரு வாரத்திற்கு யுத்த நிறுத்தம் ஏற்படுத்தியுள்ளீர்கள். ஆயுதத்தை கையளிக்கத்தான் இந்த யுத்த நிறுத்தம் என்றால் இது பிரயோசனமற்றதாகும். நாம் இனி எப்போதும் யாரிடமும் ஆயுதத்தைக் கையளிக்கப் போவதில்லை.

எம்மைப் பொறுத்தவரை இந்த யுத்த நிறுத்தத்தை ஒரு பயமுறுத்தலாகவே பார்க்கிறோம். ஆயுதங்களைத் தாருங்கள், சரணடையுங்கள் இல்லையேல் அழிக்கப் படுவீர்கள் என்று மறைமுகமாக தெரிவிக்கப்படுகின்றது. பயமுறுத்தல்களும், அடக்குமுறைகளும், இனப்படுகொலைகளும் எமது இலட்சியத்தின் மீது எமக்குள்ள பற்றை வளர்க்குமே தவிர குறைக்காது.

நீங்கள் சிறிலங்காவின் ஜனாதிபதியானதும் இந்திய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவேன் என்றீர்கள், இப்போது மாறி விட்டீர்கள். சிறிலங்காவின் பிரதமர்களும், ஜனாதிபதிகளும்சொல்லொன்று செயலொன்றாக இருப்பவர்கள் என்ற மரபை நீங்கள் மாற்ற விரும்பவில்லை போலும்.

இந்தியா இலங்கைத்தீவை ஆக்கிரமித்துள்ளதாக நீங்கள் நினைக்கவில்லை. ஏனெனில் நீங்கள் விரும்பிய ஒரு செயலை உங்களுக்கு இழப்பின்றி அவர்கள் செய்கின்றார்கள். நாம் என்ன சொல்கின்றோம் என்பது உங்களுக்குப் புரியும். அதுதான் எமது தேசத்தின் அழிவு; எமது மக்களின் படுகொலைகள். அன்று நீங்கள் செய்ததை இன்று இந்திய அரசு உங்களுக்காக செய்கின்றது. நீங்கள் உங்கள் தேசத்தின் இறைமையை அடகுவையுங்கள். எங்கள் தேசத்தின் இறைமையை நாம் யாரிடமும் அடகு வைக்க மாட்டோம்.

அமைதி ஒப்பந்தம் என்ற பெயரில் எமது இறைமையை நீங்களும், இந்திய அரசும் அபகரிக்க முயன்றீர்கள். நல்ல வேளையாக நாங்கள் ஆயுதத்துடன்இருந்தோம். இல்லையேல் எமது கதி என்னவாக ஆகியிருக்கும்.

இன்று எமது தேசத்தில் 500 க்கும் மேற்பட்ட இந்திய இராணுவ முகாம்களும், ஏறத்தாழ ஒரு இலட்சம் இந்திய இராணுவத்தினரும் உண்டு. சில வேளைகளில் உங்களுக்கு இது தெரியாமல் இருக்கலாம். எமது பிரதேசத்தில் சேருவல, அம்பாறை, வெலிஓயா போன்ற இடங்களில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்கள் பற்றி உங்களுக்குப் பூரணமாகத் தெரியும்.

எமது மண்ணை அதிகம் நேசிக்கும் உங்களுக்கு ஏன் தமிழ் பேசும் மக்கள் என்றால் இவ்வளவு வெறுப்பு? எமது தேசத்தில் இருக்கும் இந்திய இராணுவமுகாம்கள் பற்றி இந்திய இராணுவத்தால் எமது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள் குறித்தும்சில வேளைகளில் நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். நீங்கள் 83 ஆம் ஆண்டு தொடக்கம் 87 ஆம் ஆண்டு வரை இருபதினாயிரம் தமிழ் பேசும் மக்களைக் கொன்றீர்கள். ஆனால் இந்திய அரசோ 18 மாதங்களில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்களைக் கொன்றிருக்கின்றது. நீங்கள் செய்ததிலும் அதிகமாக குறுகிய காலத்தில் தமிழினப் படுகொலையை செய்த பெருமை பாரதத்திற்கு உண்டு. அது மட்டுமல்லஇன்று கொலைகாரர்களும், கொள்ளைக்காரர்களும் எமது மக்களின் பிரதிநிதிகள் எனக்கூறிக் கொண்டு இந்திய இராணுவ முகாமில் இருந்து புரிந்து வரும் கொலைகள், கொள்ளைகளும் தங்களுக்குத் தெரியாததல்ல.

அண்மையில் பேருந்தில் வந்த இரு இளம் பெண்களை பலாலி இராணுவ முகாமில் இறக்கிவிடும்படி அப் பேருந்தை மறித்த மாகாணசபைப் பிரதிநிதிகள் கட்டளையிட்டார்கள். அதை பேருந்தின் சாரதி செய்யாததால் அன்றிரவு இந்திய இராணுவத்தாலும், சமூகவிரோதிகளாலும் அச்சாரதி அவரது வீட்டில் வைத்து சுட்டுக் - கொல்லப்பட்டுள்ளார். இந்திய இராணுவம் எமது பெண்களை மானபங்கப் படுத்த மாகாணசபைப் பிரதிநிதிகள்தம்து அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இதுவும் - மாகாணசபைப் பிரதிநிதிகளுக்கு கொடுக்கப் பட்ட அதிகாரங்களில் ஒன்று.

எமது தேசத்தின் பொருளாதாரத்தடை தொடருகின்றது. எந்தெந்தநேரத்தில் ஊரடங்குச் சட்டம் வரும் என யாருக்கும் தெரியாது..

இங்கு பத்திரிகை சுதந்திரமாக வெளிவர முடியாது. இந்தியஇராணுவம் யாரையும் சுடும். பத்திரிகை இனந்தெரியாதவரால் கொலை எனத்தான்எழுதவேண்டும். அப்படி எழுதாது போனால் பத்திரிகைகள் வெளிவர முடியாது.

பத்திரிகைச் சுதந்திரம் இல்லை.

பேச்சுச் சுதந்திரம் இல்லை.

மக்கள் வாழ்வதற்குச் சுதந்திரமும் இல்லை.

இவை உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமும் இல்லை. தெரிந்திருந்தால் இதற்கு நீங்கள் மகிழ்ச்சியே அடைந்திருப்பீர்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**Liberation Tigers of Tamil Eelam**

தொடர்ந்தும் இங்கே உங்கள் இராணுவத்தால் எங்கள் மக்கள் படும் துன்பங்கள் சொல்ல முடியாதவை. உங்கள் இராணுவத்தால் சிலாவத்துறை, மகரம்பைக்குளம் போன்ற இடங்களில் எங்கள் மக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். புத்தளத்தில் 193 முஸ்லீம் வீடுகள் எரித்து அங்கிருந்து அவர்கள் துரத்தப்பட்டனர். இவையெல்லாம் தெரிந்திருக்க நியாயம் இல்லை தான். தெரிந்திருந்தால் நீங்கள் மகிழ்ச்சியே அடைந்திருப்பீர்கள். எங்கள் இழப்புக்கள் உங்களுக்கு மகிழ்ச்சியே தரும். அதேவேளை சிங்கள மக்கள் உங்கள் இராணுவத்தாலும், கறுப்புப்பூனைகளாலும் கொல்லப்படுவதைக் கண்டு நாங்கள் மிகுந்த வேதனைப் படுகின்றோம். காந்தி தேசமும் புத்த பூமியும் தமிழ்த்தேச மக்களின் இரத்தம் குடித்து சாந்தி அடைக்கின்றன. இவற்றை நாம் அனுமதிக்க முடியாது. இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேறும்வரை யுத்த நிறுத்தம் என்பது கிடையாது. அவர்கள் வெளியேறிய பின் இலங்கைத்தீவில் இரண்டு தேசங்கள் என்பதை முதலில் நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். அதன் பின் யுத்தமும் வேண்டாம், யுத்த நிறுத்தமும் வேண்டாம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
13/04/89.

## சிவில் நிர்வாகத் தடைக்கு ஒத்துழைப்பு ஏன்?

எம்மால் பிரகடனப்படுத்தப்பட்ட சிவில் நிர்வாகத்தடை எமது போராட்ட வடிவங்களில் ஒன்று. அது அந்நிய ஆக்கிரமிப்புக்காரர்கள் எமது மக்களின் மேல் செலுத்த நினைக்கும் ஆதிக்கத்தை தடுக்கும் ஓர் எதிர்ப்பு வடிவம். இதற்கு அரச ஊழியர்களின் ஒத்துழைப்பும், பங்களிப்பும் அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே. இன்று சுதந்திரத்திற்காக எமது மக்கள் சந்தித்த இழப்புகளும், புரிந்த அர்பணிப்புக்களும், காட்டிய தீரங்களும் உன்னத வரலாறாகும். அந்நிய ஆக்கிரமிப்புக்காரர்களுடன் அடிபணிய நினைத்திருந்தால் எத்தனையோ தேச பக்தர்கள் உயிரிழந்திருக்க மாட்டார்கள். ஆனால் மானம்தான் உயிரினும் பெரிதென நினைத்துச் சாவை சந்தித்தவர்கள் அவர்கள்.

அப்படியிருக்கத் தங்களின் அந்தஸ்துக்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் வசதிகளை காப்பாற்றிக் கொள்ளவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுப்பவர்கள் இத்தேசத்தின் துரோகிகளாகவே கணிக்கப்படுவர். இன்று ஒரு விடுதலைப்போராளியைப் பற்றியும், ஒரு விடுதலைக் கருவியைப் பற்றியும் (ஆயுதம்) எதிரிக்குத் தெரியப்படுத்துவது மட்டும் தான் காட்டிக் கொடுப்பு அல்ல. எமது போராட்ட வடிவத்தை சிதைக்க முயலுவது விடுதலைக்கு விசுவாசமான அரச ஊழியனை அடையாளம் காட்டுதல், அவர்களை எமது வேண்டுகோளுக்கு எதிராக வேலை செய்யும்படி நிர்ப்பந்தித்தல், ஆக்கிரமிப்பாளர்கள் தமது அதிகாரப்பற்களை எமது மத்தியில் பதிக்க உதவுதல் என்பதும் காட்டிக் கொடுப்பதே. எமது தேசத்தின் ஒவ்வொரு பிரஜைகளிடமிருந்தும் எமது மக்கள் எதிர் பார்ப்பது போராட்டத்தை முன்னெடுக்கும் அதிக பட்ச நிலைப்பாட்டையே அல்லாமல் சுயநல தந்திரோபாய நடவடிக்கைகள் அல்ல.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களினாலும் அவர்களினது கைக்கூலிகளினாலும் விதவைகளாக்கப்பட்ட எமது சகோதரிகள் ஏராளம். அநாதைகளாக்கப்பட்ட தமிழீழத்தின் செல்வங்கள் அதைவிட ஏராளம். அப்படியிருக்க உங்கள் சிலரின் துரோகத்தனங்களினால் நீங்கள் தண்டிக்கப்படும் போது அநாதைகளாவது எமது சகோதரிகளும், எமது செல்வங்களுமே யாகும். ஆனாலும் துரோகத்தனத்தை தண்டிப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த வகையில்தான் யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் இராமநாதன் எம்மால் தண்டனைக்கு உட்படுத்தப் பட்டார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
13/04/89.

நேற்று (12/04/89) இலங்கையரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஆரம்ப நாளில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பூம்புகார் எனும் இடத்தில் விடுதலைப் புலிகளைத் தேடியளிக்கச் சென்ற இந்திய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளினால் வழிமறித்துத் தாக்கப் பட்டனர்.

இம்மோதலில் இரு உயர் அதிகாரிகள் உட்பட 10 இந்திய இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 7பேர் காயம் அடைந்தனர். இம்மோதலில் 2 வாகனம் சேதமடைந்தது. எமது தரப்பில் சண்முகம், சுதா எனும் போராளிகள் வீரமரணத்தை தழுவியுள்ளனர். இவர்களுக்கு எமது வீர வணக்கங்கள்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.